ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 ஆனி மாதம்

# இந்து மதம் ஒரு சமூக விஞ்ஞானமே!



"...நமது தாயக மக்களில்
யாருக்குமே
நமது மதம் 'இந்துமதம்',
இதன் ஆச்சாரியார்
'ஞானாச்சாரியார்';
இதன் குருபீடம்
'பதினெண்சித்தர் பீடம்';
இதன் மடம்
'பதினெண்சித்தர் மடம்';
இதன் பூசாமொழிகள்
'தமிழில்தான்'
இருக்கின்றன... என்பன
போன்ற பேருண்மைகள்
தெரியாமலேயே
இருக்கின்றன!..."

இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **“இந்துமதம் ஒரு சமூக விஞ்ஞானமே!”** - தாரமங்கலம் மாதேசன் என்ற புதிய அறிமுகத்தாருக்கு குருதேவர் எழுதிய மடல்.
2. **“அருளாணை பெற்ற நலம் நாடும் மடல்”** - சமயக்குரவர் நால்வர் சன்னிதானம் திரு கேசவன் அவர்களுக்கு குருதேவர் வரைந்த மடல்.
3. **“அருளாணை பெற்ற குருவாணை”** - சிறுமுகை சித்தரடியான் திரு பழ.கோபால் அவர்களுக்கு குருதேவர் விடுத்த மடல்.
4. **“குமுதம் வார இதழுக்கு குருதேவர் தந்த விளக்க அறிவிக்கை”** - குமுதம் வார இதழில் தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றி தவறான விதத்தில் வெளியிட்ட கட்டுரைக்கு மென்மையான முறையில் கண்டனம் தெரிவித்து அச்சிட்ட அறிவிக்கையாகவே குருதேவர் வழங்கிய கருத்துக்கள்.
5. **“மந்திரித்தல்”** - அருளாட்சி நாயகம் தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரர் அவர்களை வேண்டி அருளை அநுபவப் பொருளாக பெற்றிட விரும்பும் அடியான்கள் கூற வேண்டிய வாசகங்களை குருதேவர் தாமே வழங்கியருளிய கட்டுரை.
6. **“திருமண வாழ்த்துப் பரணி”** - தமது மாணாக்கரின் திருமணத்திற்காக குருதேவரே எழுதி அருளிய வாழ்த்துப் பரணி.

# இந்துமதம் ஒரு சமூக விஞ்ஞானமே

ஓம்

தலைமைப்பீடம்,
6-12-1990.

அருள்மிகு சித்தர் நெறி ஆர்வலர் திரு S. மாதேசன், (S/O சகுசி, தண்டு மாரியம்மன் கோயில் தெரு, 2வது வார்டு, தாரமங்கலம் P.O., சேலம் Dt.) அவர்கள் சமூகத்திற்கு;

குருதேவர் ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் குருவாணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் செயல்நிலை விளக்க மடல்:

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

2) தங்களின் 27-11-90ஆம் தேதியிட்ட (*27-12-90 என்று நகலில் தவறாக இருந்தது*) உள்நாட்டஞ்சல் தலைமைப்பீடத்திற்கு கிடைத்தது. குருதேவர் விவரம் அறிந்தார். தங்களது ஆர்வத்தைக் கண்டு பெரிதும் பாராட்டி தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

3) தங்களின் பெற்றோர், உடன்பிறந்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள், ... அனைவருக்கும் குருதேவர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

4) தாங்கள் கடந்த 18-11-90 ஞாயிற்றுக்கிழமை அன்று தாரமங்கலம் இலிங்கேசுவரர் (கைலாசநாதர்) கோயிலில் நமது இயக்கத்தைச் சேர்ந்த அருள்மிகு அத்தனூர் அம்மன் சன்னிதானம் சித்தரடியார்

திரு கு. அர்த்தனரி (No.3, கொமாரப்பாளையம், மல்லூர் via, சேலம் - 636203) அவர்களைச் சந்தித்து பேசிய பிறகு தாங்கள் உடனே அஞ்சல் எழுதியது தங்களின் இந்துமதப் பற்றை உணர முடிகிறது. ஆகவே, தங்களுக்காக ஒரு சில கருத்துரைகள் இங்கு குறிப்பிடப்படுகிறது. இதை நன்கு ஊன்றிப் படித்து தெளிவு பெறுங்கள். இந்துமதத்திற்காகத் தொண்டாற்றுங்கள்.

5) பல நூறுயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே! இன்றைய மண்ணுலகப் பரப்புக்களில் பல தோன்றுவதற்கு முன்னரே! இமயமலையும், வடஇந்தியாவும் தோன்றுவதற்கு முன்னரே! விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதன் அகப் பண்பாட்டையும், புற நாகரிகத்தையும் பெறுவதற்கு முன்னரே! இளமுறியாக் கண்டத்தில் (குமரிக் கண்டம்) பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்களும் ஒன்றுகூடி ஆய்வுகள் நிகழ்த்தி இம்மண்ணின் ஈசர்களுக்கு ('மணீசர்கள்') ஏற்ப உருவாக்கிய மதமே 'இந்துமதம்'.

6) மணீசர்கள் அருள் அணுக்களைத் தங்களுக்குள் கருவாக்கி உருவாக்கிடும் பத்தி நிலைகள், சத்தி நிலைகள், சித்தி நிலைகள், முத்தி நிலைகள் முறையாகவும், நிறையாகவும் வகுக்கப்பட்ட மதமே இந்துமதம். இம் மண்ணுலகோடு நிலையாக இந்துமதச் செயலகங்கள் என்றென்றும் இருக்கும் வண்ணமே ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களும், இருநூற்று நாற்பத்துமூன்று சத்தி பீடங்களும், நூற்றெட்டுத் திருப்பதிகளும், தொண்ணூற்றுறு வகை வழிபடு நிலையங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றின் திருவாக 'இறை', 'கடவுள்', 'தெய்வம்', 'ஆண்டவர்', 'பட்டவர்', 'தேவர்', 'தேவதை', 'அமரர்', 'இருடி', 'கணபாடிகள்' எனப்படும் நாற்பத்தெட்டு வகையினர் தோன்றி வளர்ந்து வாழ்ந்திடும் வழிவகைகள் அனைத்தும் மிகமிகத் தெளிவாக வகுத்து அளிக்கப்பட்டிருக்கின்றன பதினெண்சித்தர்களால்.

7) இந்துமதம் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டின் கருவாக என்றென்றும் இருக்குமாறு 'அருட்சினை முறைகள்', 'கருவறைப் புத்துயிர்ப்பு முறைகள்', 'எழுந்தருளி உயிர்ப்பு முறைகள்', 'பூசாவிதிகள்', 'குருமார் ஒழுகலாறு', 'அருளாளிப் படிகள்', 'மருளாளி ஈடுகள்', 'மந்திற மந்திர மந்தர சாத்திறங்கள்', 'ஆகமங்கள்', 'மீமாம்சைகள்', 'நிடதங்கள், துணை, இணை', 'நான்மறைகள்', 'நான்முறைகள்', 'நானெறிகள்', 'நான்வேதங்கள்', 'நவநாதங்கள், 'பதினெண்சித்தங்கள்', 'கருவாக்குகள்', 'கருவாசகங்கள்', 'குருவாக்குகள்', 'குருவாசகங்கள்', 'திருவாக்குகள்', 'திருவாசகங்கள்', 'அருள்வாக்குகள்', 'அருள்வாசகங்கள்', 'மருள்வாக்குகள்', 'மருள்வாசகங்கள்', 'பிருமணங்கள்', 'பிறணவங்கள்', 'காயந்திரிகள்', 'திசைக்கட்டுகள்', 'அத்திறங்கள்', 'பிறவாமைச் சித்திகள்', 'இறவாமைச் சித்திகள்', 'அருள்வேட்டல் மாலைகள்', 'அறுபத்து நான்கு வகைத் தோத்திறங்கள்', ... முதலிய எண்ணற்ற கலைநிலைகள் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் நிலைத்து நிற்குமாறு செய்துள்ளார்கள் பதினெண்சித்தர்கள்.

8) அருளை அநுபவப் பொருளாகப் பெறவும்; பிறருக்கு வழங்கவும் மானுடரில் பதின்மூன்று வகையான அருளாளர்களை உருவாக்கும் வழிவகைகளை வழங்கும் ஒரே மூத்த முதல் மதமாக இந்துமதத்தைப் படைத்தார்கள் பதினெண்சித்தர்கள். இன்றைக்கும் சரி, என்றைக்கும் சரி; 1. பத்தர், 2. பத்தியார், 3. போத்தர், 4. போத்தியார், 5. புத்தர், 6. புத்தியார், 7. முத்தர், 8. முத்தியார், 9. சீவன்முத்தர், 10. சீவன்முத்தியார், 11. உருவசித்தியார், 12. அருவசித்தியார், 13. அருவுருவ சித்தியார் ... எனும் பதின்மூன்று வகை அருளாளர்களும் இந்துமதத்தின் செயல்வடிவமாகவே விளங்கிடச் செய்துள்ளார்கள். எனவே, இந்துமதத்தின் அருமைபெருமைகளைச் செயல்வடிவில் விளக்கும் சான்றூகவும், ஊன்றூகவும் உங்களை உருவாக்கிக் கொள்ள வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!! ... என்று அழைக்கிறது இந்து சித்தாந்த மறுமலர்ச்சிக் கழகம்.

9) இன்றைய குருமகாசன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞானச்சாரியார், குருதேவர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் உலகெங்கும் உருவாக்கியுள்ள குருகுலங்களிலும், ஞானப் பள்ளிகளிலும், தவச் சாலைகளிலும், அருட்சோலைகளிலும், ... அவரவர் ஊழ்வினைக்கும், விதிக்கும், ஓகத்துக்கும், முயற்சிக்கும் ஏற்பச் சமயக் கல்வி கற்றுத் தேர்ச்சி பெறலாம். பதினெண்சித்தர்களின் சமயக் கல்வித் திட்டத்தால்தான் 'சன்னிதானங்கள்', 'ஆதினங்கள்', 'பீடங்கள்', 'மடங்கள்', 'பண்டாரங்கள்', 'அமளிகைகள்', 'திருவடிகள்', 'இருக்கைகள்', 'அருளாளிகள்', 'அருளாடு நாயகங்கள்', 'மருளாளிகள்', 'மருளாடு நாயகங்கள்', 'நாளோலக்க நாயகங்கள்', 'திருவோலக்க நாயகங்கள்' ... எனப்படும் நாற்பத்தெட்டு வகையான அருளாளர்களும் முறையாக உருவாக உருவாக முடியும்.

10) **இந்து மதம் ஒரு சமூக விஞ்ஞானமே**. இதுவே அனைத்து ஞானங்களுக்கும் தாய். இதன் மூலமே, அனைத்துலக வேற்றுமைகளும், போட்டிகளும், பொறாமைகளும், போராட்டங்களும் முழுமையாக அகற்றப்பட்டு உண்மையான ஒற்றுமை உருவாக்கப்பட முடியும். பதினெண்சித்தர்கள், அனைவரும் இந்து மதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே **'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் சித்தர் நெறியே இந்து மதம்'** என்று குரு பாரம்பரியம் எனும் சமய வரலாற்று நூலில் மிகத் தெளிவான பொருளுடையச் சொற்களால் விளக்கமாக வழங்கியுள்ளார்கள். இதனால், உலக மக்கள் ஒவ்வொருவரும் தங்களை இந்து என்று கூறிக் கொள்ளும் பெருமையையும், உரிமையையும் பெறுகின்றனர். இந்த இந்து மதம் தான் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவியிருந்தது. எனவே, இன்றைய இந்துக்கள் தங்களுடைய சமயக் கலைகளைக் கற்றுத் தேர்ந்து உலகம் முழுவதும் அருளொளி பரப்பிட மெய்ஞ்ஞானப் பயிர் விளைவித்திடத் தன்னலமின்றி முன்வரல் வேண்டும்.

11) தாரமங்கலத்திலேயே தாங்கள் பதினெண்சித்தர் மடத்தின் சார்பில் ***'சிவசத்தி வார வழிபாட்டு மன்றம்'*** ஒன்றை ஆரம்பித்திடுங்கள். அதில் ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்களை ஒன்றுகூட்டி கூட்டு வழிபாடு நிகழ்த்துங்கள். அருளை அநுபவப் பொருளாகப் பெற்று மக்களுக்கு அருட்பணி ஆற்றுங்கள். தங்களுக்கு வேண்டிய உதவிகளையும், ஆதரவுகளையும், ஒத்துழைப்புக்களையும் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். கவலை வேண்டாம்.

i. அருள்மிகு மேற்குமண்டல இ.ம.இ. செயலாளர், அருள்மிகு வேம்படிதாளம் சுடலைக்காரி சன்னிதானம் குருமார் இரா. வெங்கடேசன், 2 / 68, மெயின் ரோடு, வேம்படிதாளம், சேலம் மாவட்டம் - 637504.

ii. அருள்மிகு மேற்குமண்டல நிர்வாகக் குழு கொள்கைப் பரப்புச் செய்லாளர், அருள்மிகு தாத்தா மேட்டூர் முனீசுவரர் சன்னிதானம், சித்தரடியார் அ. அரங்கஞதன், ஆசிரியர், 11, வேளாளர் தெரு, மல்லூர், சேலம் மாவட்டம் - 636203.

iii. அருள்மிகு மேற்கு மண்டல அருட்பணி விரிவாக்கத் திட்ட நாயகம், அருள்மிகு மேட்டுப்பாளையம் வனபத்திர காளி சன்னிதானம், சித்தரடியார் இரா. இராசசேகரன், 2 / 90 ஆலாங்கொம்பு, சிறுமுகை, கோவை மாவட்டம் - 641302.

போன்றவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டும் விளக்கம் பெறலாம்.

மற்றவை தங்கள் பதில் மடல் கண்டு.

உடன் பதில்.

**அன்பு**

**தலைமைப்பீட எழுத்தர்,**

**வேம்பை சீ.மணி.**

6-12-1990, இரவு 11:15 மணி.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது//**

ஓம்

# அருளாணை பெற்ற நலம் நாடும் மடல்

ஞானாச்சாரியார்,
சென்னை-53,
4 - 4 - 1990.

1) அருள்மிகு சமயக்குரவர் நால்வர் சன்னிதானத் திருத்தோற்ற எழுந்தருளி சித்தரடியான் திரு த.கேசவன் (5, பழைய மாகாளிப்பட்டி ரோடு, தெற்குவெளி வீதி, மதுரை-1) அவர்கள் சமூகத்துக்குத்

தங்களின் குருதேவர், தலைவர், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுக்கும் தாத்தாவின் அருளாணை பெற்ற நலம் நாடும் மடல்:

2) கனிவும் இனிமையும் நிறைந்த திருவருட்செல்வ! உன்னை அடிக்கடி காண வேண்டும் என்ற விருப்பம் மேலிடுகிறது. ஆனால், அங்குள்ள சூழல்கள், வசதி வாய்ப்புக்கள் முதலியவற்றை எண்ணும் போது உங்களை எம்மைக் காண வரச் சொல்ல இயலவில்லை. யாமும் உங்களையெல்லாம் காண வர இயலவில்லை.

3) பயிற்சி முகம் நிகழ்த்துவதற்காக விரிந்தும் விரைந்தும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். சில கட்டுரைகள் தயாராகி விட்டன. அவற்றை நகலெடுக்கும் கருவியில் நகலெடுக்க (சைக்கிலோசுடைல்) முயற்சிக்கிறோம். விளம்பரத் தட்டிகள் வைக்க ஏற்பாடு செய்துள்ளோம். கருகுலத்தில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பொருத்த ஏற்பாடுகள் நடக்கின்றன. கொட்டகையையும் புதுப்பிக்கும்

பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொத்தனர் வேலைகளும் சில நிகழுகின்றன.

4) நம்மவர்களுக்கிடையில் அருளாற்றல் நிறைந்தவர்கள் பலராக இருந்தும்; நமது இயக்கங்கள் சிறந்த வளர்ச்சி பெறவில்லை. இதற்குக் காரணம் நம்மவர்கள் தலைமையை முழுமையாக ஏற்றுப் புரிந்து செயல்படாததுதான். அதாவது, அருட்பணியாற்றுபவர்கள்; தங்களை அன்றாட ஒழுகலாறுகள் மூலமும்; மற்ற அ.வி.தி. செயல்வீரர்களோடு கலந்து பழகிக் கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொண்டு ஒற்றுமையுடன் பிறரோடு இணைந்து செயல்படுவதன் மூலமும்தான் தங்களுடைய அருளாற்றலை முழுமையாகப் பயன்படுத்திட முடியும். இப் பேருண்மையினை ஒவ்வொரு சந்திப்பிலும் நம்மவர்கள் உணர்வுப் பூர்வமாக எடுத்துக் கூறியும்; விளக்கியுரைத்தும், விவாதித்தும் வளர வேண்டும்.

5) நமது அருட்செல்வர்கள் பெரும்பாலும் தனித்தே செயல்படுகிறார்கள். இதனால், தனிமரங்கள் ஆங்காங்கே இருக்கும் நிலைதான் அருட்சாலையில் உள்ளது. ஆனால், அருட்சாலையில் ஒருசில அருளாளர்கள் ஒன்று சேர்ந்து செயல்படும் அருட்சோலைகள் ஆங்காங்கே தோன்றினால்தான் நல்லது.

6) நமது நாயன்மார்களும், ஆழ்வார்களும், அவ்வப்போது தோன்றும் சித்தியாளர்களும் எண்ணற்ற சித்து விளையாடல்களை, வியப்புக்களை, மாயங்களை, அதிசயங்களைச் செய்திட்டும் கூட நமது இந்து மதம் <u>**வடிவமைப்புப் பெறவில்லை**</u>; செயல் ஒழுங்கும் கட்டுப்பாடும் பெறவில்லை; நாடு தழுவிய பொதுவான தத்துவ நூலோ, செயல்சித்தாந்த விளக்க நூலோ, வரலாற்று நூலோ, ... பெரிய அளவில் இல்லை; நமது இந்து மதத்துக்கு என்று ஒரு தலைமையோ அல்லது கூட்டுத் தலைமையோ இல்லை; நமது இந்து மதத் தலைவர்களாகக் கருதப்படுபவர்களுக்கிடையில் ஏறத்தாழச் சந்திப்புக்கள் நிகழ்வதே இல்லை;

ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள விரும்பவில்லை; தொடர்பு கொள்ள முயலுபவர்களுக்கு ஆதரவோ, வரவேற்போ கூட இல்லை; நமது மதவாதிகளும், மதத் தலைவர்களைத் தேடுவதில்லை, நாடுவதில்லை; அவசியமென்று உணர்வதில்லை, மதிப்பதில்லை, ஏற்றுப் போற்றிப் பயன்படுத்துவதில்லை. நமது மடாதிபதிகள், சாமியார்கள், மத நிறுவனத் தலைவர்கள், ... முதலியோராவது மத அறிஞர்களையும், கலைஞர்களையும் ஒன்றுகூட்டிக் கருத்தரங்கு, மாநாடு, ... முதலியவைகளை நிகழ்த்துவதில்லை; இவற்றின் அடிப்படையில்தான் நமது தாயக மக்களிடையில் மொழிப் பற்று, இனப் பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பிடிப்பு, ... முதலியவை நலிந்து மெலிந்து நோயுற்று விட்டன.

7) இப்படி, நமது மதவாதிகளாலேயே நமது மதம் மிகப்பெரிய பாதிப்புக்களைப் பெற்றுள்ளதே தவிர நாத்திக வாதிகளாலோ, மத விரோதிகளாலோ, துரோகிகளாலோ, எதிரிகளாலோ அதிகப் பாதிப்பை அடையவில்லை. இதுதான் உண்மை. இந்த உண்மையை நம்மவர்களில் கணிசமானவர்கள் வெளிப்படுத்திட முயன்றிட வேண்டும். அதாவது, செயல்வடிவிலும், சொல்வடிவிலும் இப் பேருண்மையை விளக்கிட நம்மவர்களில் சிலர் பெருமுயற்சிகளைச் செய்திட வீரதீரத்துடனும், தியாகத்துடனும் வெளிப்பட்டிடல் வேண்டும்.

8) இவற்றை எண்ணியே பயிற்சி முகங்களை வாரத்துக்கு மூன்று நாட்கள் வெள்ளி, சனி, ஞாயிறுகளில் நிகழ்த்திடத் திட்டமிட்டுள்ளோம். இதன்படி நாலைந்து பயிற்சி முகங்கள் நிகழ்ந்திடும். ஒவ்வொன்றிற்கும் பத்துப் பேர்களே அநுமதிக்கப்படுவர். அதுவும் எல்லா மண்டலங்களில் இருந்தும் அழைக்கப்படுவர். இதில் நமது இயக்கத்தவர் அல்லாத புதியவர் சிலர் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்கள் அல்லாமல் பார்வையாளர் என்று கலந்து கொள்பவரும் அநுமதிக்கப்படுவர்.

**குறிப்பு:-**

(i) பயிற்சி முகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அதிக அளவில் இட்டும், தொட்டும், சுட்டியும் பயிற்சி வழங்கப்படும்.

(ii) ஒரு சிலரைச் சீக்கிரம் தயாரிக்க அல்லது பேராற்றலுடன் தயாரிக்கப் பல பயிற்சி முகங்களில் பங்கு பெறவும் அநுமதிக்க அருளாணை இருக்கிறது.

9) நாளேடுகளில் (Newspaper) வெளியிடத் தயாரித்த விளம்பர வாசகம் தங்களுக்கு அனுப்பப்படுகிறது. முடிந்தால் உடனே தங்களால் இயன்ற அளவு இதனை வெளியிடவும். கூட்டாகச் சேர்ந்து வெளியிட்டாலும் சரியே!

10) நமது அ.வி.தி. பணிகள் அமுதச் செந்தமிழ் மொழிப் பூசாமொழிகளால் நிகழுவதாலும்; நாம் கூறும் இந்துமத வரலாறு மிகத் தெளிவாகத் தமிழினத்தின் சமய, சமுதாய, அரசியல் வரலாறுகத்தான் இருக்கின்றன என்பதாலும்; நமது அ.வி.தி. செயல்கள் தனிமனித உள்ளங்களையும், இல்லங்களையும் அருளூற்றுக்களாக மாற்றிடும் என்பதாலும், ... நம்மால்தான் தமிழின மொழி மத விடுதலைத் தத்துவத்துக்கு வாழ்வும் ஆட்சியும் இருக்கின்றது. மற்றபடி, நாட்டில் உள்ள எல்லா வகையான அமைப்புக்களுமே கொள்கையோ, குறிக்கோளோ, தெளிவான சட்டதிட்டமோ இல்லாமல்தான் இருக்கின்றன. அது மட்டுமல்ல, ஏறத்தாழ எல்லா அமைப்புக்களுமே மொழி பற்றியோ, இனம் பற்றியோ, மதம் பற்றியோ, நாடு பற்றியோ அக்கரையில்லாமல் தன்னல வெறியும், பொருள் வெறியும், புகழ் வெறியும் கொண்டுதான் அலைகின்றன. எனவேதான், நம்மால்தான் நமது தாயகத்துக்கு விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் ஏற்பட்டிடும் என்ற பேருண்மையை நினைத்து நினைத்துச் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம் நாம்.

11) <u>நமது தாயக மக்களில் பெரும்பாலானவர்கள் நல்ல பத்தியாளர்கள்தான். ஆனால், யாருக்குமே **நமது மதம் 'இந்துமதம்', இதன் ஆச்சாரியார் 'ஞானாச்சாரியார்'; இதன் குருபீடம் 'பதினெண்சித்தர் பீடம்'; இதன் மடம் 'பதினெண்சித்தர் மடம்'; இதன் பூசாமொழிகள் 'தமிழில்தான்' இருக்கின்றன ... என்பன போன்ற பேருண்மைகள்** தெரியாமலேயே இருக்கின்றன.</u> இதனால்தான், நமது மதத்தின் மலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், செழிச்சிக்கும், ஆட்சிக்கும், ... என்னென்ன செய்ய வேண்டும் என்று எண்ணிப் பார்க்கத் தெரியாதவர்களாகவே நமது தாயக மக்கள் இருக்கிறார்கள். இதனால்தான், நமது மத நூல்கள் அச்சாகிட; மதத் தலைவர்களும், தொண்டர்களும் வசதிவாய்ப்புக்களுடன் செயல்பட்டிட; நமது மதத்திற்கெனப் புதிய புதிய நிறுவன நிருவாகங்கள் தோன்றிட; ஏற்கனவே நமது மதத்துக்குரிய நிறுவன நிர்வாகங்கள் வளத்தோடும், வலிவோடும் செயல்பட்டிட, ... எல்லாவகையான உதவிகளையும், முழுநேர ஊழியர்களையும், தாராளமான பொருட்கொடையையும் உலகம் தழுவி வழங்கப்படும் நிலை உருவாக முடியாமல் இருக்கிறது.

12) <u>**தாங்கள் உதவுவது போல் ஒரு சிலர் எமக்கு உதவினால் கூடப் போதும்; எண்ணற்ற செயல் திட்டங்களை செயலாக்கிடுவோம் யாம்.**</u> ஆனால்?!??! - திருவருட்செல்வ, எம் காலத்துக்குள் ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். பயிற்சி முகங்கள் இதற்காகவே உருவாகி வருகின்றன. எமது வாழ்வு (The Test of Divinity) 'ஒரு தெய்வீகச் சோதனை'யாக, 'கடவுட் சோதனையாக அல்லது ஆய்வாக' வளருகிறது. தங்களைப் போன்றோர்தான் இதன் சான்றுகள், ஊன்றுகள்.

13) நடமாடும் நாயனாரே! (நாயன் + ஆனர் = நாயகன் + ஆனர்) சித்தரடியான் த. கேசவனே! நமது தமிழர்க்குரிய மெய்யான இந்துமதத்தில் 'அறவி', 'உறவி', 'துறவி', 'மறவி' என்று நான்கு வகைப்பட்டவர்கள் அருளுலகக் காப்பாளர்களாக, வாரிசுகளாக இருப்பதாகக்

குறிக்கப்படுகிறது. ஆனால், அருளுள்ளத்தோடும், மதப்பற்றோடும் வாழ்பவர்களில் மேற்படி நாற்றிறத்தார் எத்தனை பேர் இருப்பர் என்பதுதான் கேள்வி! மிகச் சிறந்த தியாக உள்ளத்துடனும், மெய்யான பத்தியுடனும், நிலையற்ற மானுட வாழ்வின் மீது தத்துவ விசாரணை செய்து அருட்பணி ஆற்றப் புறப்படும் பொதுநோக்குடனும், ... செயல்படக் கூடியவர் சிலர் கிடைத்தாலும் போதும்; (800) எண்ணூறு கோடி மக்களும் பயனடையும்படி அருட்பணிகளை ஆற்றிடலாம். ஆனால்????

14) இனிய இறையருட் செல்வ! இந்த அஞ்சலை; நம்மவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு வந்ததாகவே ஏற்க வேண்டும்; ஏற்றுப் புரிந்து செயல்பட வேண்டும். 'நம்மவர் ஒவ்வொருவரும் குருவுக்குள் வாழுகின்றனர். குருவும் நம்மவர் அனைவருக்குள்ளும் வாழுகிறார்' என்ற பேருண்மை நம்மில் பலருக்கும் இன்னும் புரியவே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. இதனால்தான், குருவாணையை முழுமையாகப் புரிந்தும் உணர்ந்தும் முறையாகச் செயல்படுபவர் நம்மிடையே போதுமான அளவு இன்னும் தோன்றவில்லை. நம்மை விட்டு விலகுபவரும், விலக்கப் படுபவரும் தொடர்ந்து உருவாவதுதான் நமது வளர்ச்சியையும், நேர்மையையும், செயல்வீரத்தையும் விளக்குகிறது. யாம், யாரையும் தண்டிப்பதில்லை. ஆனால், கடுமையாக அவ்வப்போது கண்டிக்கிறோம். இதையே தாங்க முடியாதவரும் உளர். யாம் பாராமுகமாக எல்லாத் தவறானர்களையும் நம்மோடு செயல்பட அனுமதிக்க இயலாது. விரைவில் சிலர் கண்டிக்கப்பட உள்ளனர். அவர்கள் திருந்த வேண்டும். குருவாணையை மறந்தும், துறந்தும் தாந்தரீகப் பூசைகள் பற்றிப் பேசுவதும்; அதில் ஈடுபடுவதுமாகச் சிலர் உள்ளனர். <u>**'அருட்போர் அறிவிக்கப்பட்ட பிறகு இப்பூசை பற்றிப் பேசவே கூடாது'** என்ற அருளாணை விதிக்கப்பட்டும் தவறாகப் பேராசையால் செயல்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களின் குடும்பம் பாதிப்புக்களைப் பெற ஆரம்பித்து விட்டது. விரைவில்</u>

இவர்கள் அழிவையும், இழிவையும் அடைவர் என்று அருளாணை வந்துள்ளது. இதை அனைவருக்கும் இந்த அஞ்சலைப் படித்துக் காட்டிக் கையொப்பம் பெற்றுத் திருத்திட முயலுக. இதற்கு நகல் அல்லது Xerox எடுக்கவும். "தனிமனிதத் தவறுக்குத் தத்துவமோ, இயக்கமோ, தலைவரோ பொறுப்பாக முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!"

**அன்பு**
**ஞானாச்சாரியார்,**
**சித்தர்,**
**5 - 4 - 1990.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# பகுத்தறிவா?

பெரியார் இறந்த பின்னும் இன்னமும் பெரியார் வாழ்க! என்று கூறுவது பகுத்தறிவா? கூறுபவர்கள்தான் பகுத்தறிவு வாதிகளா?

பகுத்தறிவு வாதிகள் அனைவரும் சிந்தனை வாதிகளே. பகுத்தறிவு வாதிகள் சிந்தனைச் சிங்கங்கள். யாரையும் தலைவராக கொண்டு அந்தத் தலைவரின் கொள்கையைப் பின்பற்ற மாட்டார்கள். தனக்கென ஒரு கொள்கை, குறிக்கோள் உள்ளவர்கள். ஆனால், இன்றுள்ள பகுத்தறிவு வாதிகள் என்று கூறிக் கொள்பவர்களோ ?! ?! ?!

**//தலைமைப்பீடக் குறிப்பேடுகளில் குருதேவர் கூறி எழுதப்பட்டு உள்ள கருத்து.//**

# அருளாணை பெற்ற குருவாணை

ஓம் குருவே துணை

தலைமைப்பீடம்,
9 - 7 - 1990.

அருள்மிகு சேரப் பெருமண்டல மாதண்ட நாயகம், அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம், சித்தரடியான் திரு பழ. கோபால் (6 / 504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை - 641302) அவர்கள் சமூகத்திற்கு ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் குருவாணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் மடல்:

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

2) தங்களின் 5-7-90ஆம் தேதியிட்ட (அ. எண்: 36 / 90) அஞ்சல் தலைமைப்பீடத்திற்கு கிடைத்தது. மகிழ்ச்சி, பாராட்டு, வாழ்த்து. தங்களைப் போல் தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒருவராவது தத்துவநாயகத்தைப் புரிந்து கொண்டால் போதும். பிறகு தமிழின மொழி மத விடுதலை எளிதாக உருவாகிடும். அரசியல் தலைவர்களும், தொழிற்கட்சி தலைவர்களும், கலையுலக வாதிகளும் தமிழ்மொழி உணர்வு, தமிழ் இனப்பற்று, தமிழர்களின் மதமான சித்தர் நெறி எனும் சீவநெறியான இந்துமதப் பற்று, ... முதலியவைகளை எல்லாம் நலியும்படி, சிதையும்படி, சீரழியும்படி, நோயுறும்படி, எவ்விதமான வாழ்வுமின்றி செய்து வாழுகிறார்கள், செய்து விட்டார்கள். எனவேதான், தமிழர்கள் மொழியின் பேராலோ, இனத்தின் பேராலோ, மதத்தின் பேராலோ ஒன்றுதிரளவோ அல்லது ஒற்றுமைப்படவோ அல்லது

ஒருமைப்பாட்டுடன் செயல்படவோ முடியவே முடியாத கேவலநிலை, அவலநிலை உருவாகி விட்டது.

இன்னும் சொல்லப் போனால், தமிழர்களே மொழிப் பற்றையும், இனப் பற்றையும், மதப் பற்றையும் இழித்து, பழித்துப் பேசக் கூடிய ஆபத்தான நிலை உருவாகி இருக்கிறது. அதாவது, மரத்தின் நுனிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு அக்கிளையின் அடிப்பாகத்தை வெட்டுவது போல தமிழர்களே தங்களுடைய மொழியுணர்வுகளையும், இன உணர்வுகளையும், மத உணர்வுகளையும் எதிர்த்து, இழித்து, பழித்து, அழிக்க முற்பட்டு விட்டார்கள். இதற்கெல்லாம் காரணம் தந்தை பெரியாரின் காட்டாற்றுப் போக்கான பிருமண எதிர்ப்புக்காக செய்யப்பட்ட மத எதிர்ப்பு செயல்களேயாகும். எனவே, நாம் மிகுந்த பொறுப்போடும், விழிப்போடும் நமது மதம் சார்ந்த இயக்கங்களின் கருத்துக்களையும் பரப்ப வேண்டும், வளர்க்க வேண்டும். இல்லாவிட்டால் பாறையில் மோதி தலையை உடைத்துக் கொண்டது போல் பிருமண எதிர்ப்பாளர்கள் கண்மூடித்தனமாக நம்மை பிருமண அடிமைகள், பிருமணக் கூலிகள், பிருமண தாசர்கள், மத வெறியர்கள், மூடநம்பிக்கைக் காரர்கள், ... என்றெல்லாம் விமரிசனம் செய்து நமது உழைப்பை எல்லாம் வீணாக்கி விடுவார்கள்.

இன்னும் சொல்லப் போனால், பகுத்தறிவுவாதிகள் என்று கூறிக் கொள்ளக் கூடியவர்கள் ‘தமிழனுக்கு மதம் என்ற ஒன்றே கிடையாது. தமிழர்கள் மத உணர்வு இல்லாத விலங்குகளாக, காட்டுமிராண்டிகளாகத்தான் வாழ்ந்தார்கள்; 3000 ஆண்டுகளுக்கு முன்னால் வந்த பிருமணர்கள்தான் மதத்தையே உண்டாக்கினார்கள், கண்டுபிடித்தார்கள், ...’ என்றெல்லாம் பைத்தியக்காரத்தனமாக கூறித் திரிகிறார்கள். எனவே, நாம் மிகவும் நிதானமாக, பகுத்தறிவின் பேரால் வாழுகின்ற பகுத்தறிவே இல்லாதவர்களை திருத்த முயலவேண்டும். இல்லாவிட்டால் நமது

காலமும், கருத்தும் இவர்களோடு போராடுவதிலேயே வீணுகி விடும்.

3) தங்களேப் போன்ற அநுபவசாலிகளாவது நம்முடைய கொள்கைகளேயும், குறிக்கோள்களேயும் எப்படி மக்களிடையே பரப்புவது, வளர்ப்பது, ஆட்சிநிலே பெறச் செய்வது என்ற ஆய்வுகளில் இறங்கி, புதிய புதிய வழிமுறைகளேக் கண்டுபிடித்தாக வேண்டும். தமிழர்களுடைய சித்தர்நெறியின் மூலம்தான் தமிழர்களே, தென்னிந்தியர்களே, இந்தியர்களே, உலக மக்களே ஒற்றுமையோடும், ஒருமைப்பாட்டோடும், சமாதான சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவு வாழ்வு வாழும்படிச் செய்ய முடியும். இதற்குரிய அரிய, பெரிய, கொள்கையும், குறிக்கோளும், செயல்திட்டமும் நம்மிடம்தான் இருக்கின்றன.

எனவே, நாம் நம் காலத்தில் மிகப் பெரிய அரிய, சீரிய, நேரிய முயற்சிகளே உரிய முறையில் செய்தேயாக வேண்டும். அதற்காகவே படித்தவர், படியாதவர், பணக்காரர், ஏழை, தொழிலாளி, முதலாளி, ... என்ற எவ்வித வேறுபாடும் இன்றி நமக்குக் கிடைக்கக் கூடிய அனேவரையுமே நமது கொள்கைக்கும், குறிக்கோள்களுக்கும் பாடுபடக் கூடிய மாவீரர்களாக உருவாக்கி வருகிருேம். ஆனுல், உருவாகிறவர்கள்தான் பெரும்பாலும் வீரர்களாக இல்லே. அதற்குக் காரணம் நம்மவர்களுக்கு இடையிலேயே இருக்கக் கூடிய வறட்டுத்தனமான முரட்டுப் பிடிவாதம், அகம்பாவம், ஆணவம், பதவியாசை, புகழாசை, ... முதலிய இழிந்த பண்புகள்தான். இன்னும் சொல்லப் போனுல், நம்மில் யாருமே தங்களுடைய தரம், திறம், திரம், உரம், ... முதலியவைகளே எண்ணிப் பார்ப்பவரே இல்லே? இப் பேருண்மையினே இனிமேலாவது நம்மவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

4) இராமகிருட்டிண பரம அம்சருக்கு ஒரு விவேகானந்தர் கிடைத்தது போல் 43,73,091 ஆண்டுகளாக (*இது 1990ஆம் ஆண்டுக் கணக்கின்படி;*

*நிகழும் 2023இல் 43,73,124 ஆண்டுகளாக*) வாழ்ந்து வளர்ந்து வரும் உலகத் தொன்மையான தமிழினத்தின் வரலாறு, இலக்கியம், அருட்துறை, ... முதலியவைகளை விளக்கப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் எமக்கு ஒரு வாரிசு கிடைப்பது மங்கிய நிலையில், தேங்கிய நிலையில், மயங்கிய நிலையில், தயங்கிய நிலையில், தூங்கிய நிலையில், ... பலரின் உள்ளத்து அளவில்தான் இருக்கிறது. இது மாற வேண்டும் என்றால் தலைவரையும், தத்துவத்தையும் உயிரென மதித்து ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்திடக் கூடிய இயக்கச் செயல்வீரர்கள் இன்னும் நம்மவர்களுக்கு இடையில் இருந்து உருவாகவில்லை, உருவாகவில்லை, உருவாகவில்லை, உருவாகவே இல்லை.

இதை எண்ணிப் பார்த்து நம்மவர்களில் ஒவ்வொருவரும் அத்தகைய வீரம் மிக்க, விவேகம் நிறைந்த செயல்வீரர்களாக உருவாக முயற்சிக்க வேண்டும். இதற்காக நமது அச்சிட்ட கையெழுத்துப் பிறதிகளாக உள்ள இலக்கியங்களை எல்லாம் படித்தோ அல்லது படிக்காமலோ குருபத்தியில் சிறந்த அருளாளர் சிலராவது உருவாகிடக் கூடிய நல்ல காலம் வர வேண்டும். அதற்காகத் தங்களைப் போன்றவர்கள் உழைக்க வேண்டும். இப்பொழுது தாங்கள் தங்களுடைய வட்டாரத்தில் உருவாகி இருக்கக் கூடிய நல்ல ஒற்றுமை சூழ்நிலை மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கிறது. தாங்கள் தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தையும், இந்துமத - ஹிந்துமத ஆன்மீக திருச்சபையையும்; அரசியல் இயக்கம் போல் பொதுமேடைகளில் பேசி வளர்க்க வேண்டும். தங்களால் இயன்ற வரை இவற்றிற்கு சுற்று வட்டாரங்களில் கிளைகளை உருவாக்க வேண்டும். இதற்காக மேற்கு மண்டலம் முழுவதும் இந்த இரண்டு அமைப்புக்களுக்கும் தேவையான பொதுச் செயலாளர் என்ற பொறுப்பினை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இ. ம. இ.யும் அ. வி. தி.யும் ஏற்கனவே செயல்பட்டு வருவது போல் மக்களிடம்

நேரடித் தொடர்பு கொண்டு நிதானமாக வளர முற்படட்டும். தாங்கள் பெரும் வீரத்தோடு அதிக நேரத்தை செலவிட்டு உங்களின் இரு கண்ணென இவ்விரு இயக்கங்களையும் வளர்க்க வேண்டும். மற்ற மண்டலங்களுக்கு சென்று ஒரு மாபெரும் செயல்நிலையை உருவாக்கக் கூடிய மாதண்ட நாயகமாக வளர்த்திடுங்கள், வாழ்ந்திடுங்கள். உங்களுடைய எண்ணங்களையும், செயல்திட்டங்களையும் அடிக்கடி தெரிவியுங்கள். அனைத்தும் வெற்றியாகிடட்டும்.

**அருளாணை பெற்ற குருவாணை இது.**

**<u>குறிப்பு</u>:-** இதற்கு பல நகல்கள் எடுத்துப் பல முக்கியமான சன்னிதானங்களுக்கு, வட்டாரங்களுக்கு உடனே அனுப்பி வைக்கவும்.

உடன் பதில்.

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
**9 - 7 - 90.**

<u>நகல் எடுத்தவர்</u>:-

அருள்மிகு மேட்டுப்பாளையம் வனபத்திர காளி சன்னிதானம், அருள்மிகு ஆனைமலை மகா சத்தி மாசாணியம்மன் சன்னிதானம், ஏற்புச் செல்வன், செல்ல மகன், குருவழி வாரிசு, சித்தர் மகன், சித்தரடியார் இரா. இராசசேகரன், ஆலாங்கொம்பு.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: ஆலாங்கொம்பு சித்தரடியார் திரு இராசசேகரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குமுதம் வார இதழுக்கு குருதேவர் தந்த விளக்க அறிவிக்கை

பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம்,
இந்து வேத முன்னேற்றக் கழகம்,
சித்தர் கருவூரர் அருட்கோட்டம்,
3, சிவாசி நகர், மேம்பாலம், தஞ்சை.

ஓம்

தலைமைப்பீடம்,
4-2-90.

பெறுநர்:

உயர்திரு ஆசிரியர் அவர்கள்,
குமுதம் வார இதழ்,
151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600010.

அனுப்புநர்:

ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை,
குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர்
அரசயோகிக் கருவூரர், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,
13, குமாரசாமித் தெரு, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600053.

பொருள்:

8 - 2 - 90 தேதியிட்ட குமுதத்தில் நாற்பத்தெட்டாம் பக்கத்தில் "***தஞ்சைக் கோயிலில் ஒரு தவறு***" என்ற தலைப்பில் திரு பெ. சண்முகம் என்பவர் எழுதியுள்ளதற்கு ஒரு விளக்கம்.

ஐயா!

1. இக்கோயிலைக் கட்டிய ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் நேரடி வாரிசுகளும், பதினெண்சித்தர் மடமும், பீடமும் வாழையடி வாழையென வாழ்ந்து வருகிறார்கள்; தொடர்ந்து அவர்கள் வளர்ந்து இத் தஞ்சைக் கோயில் பற்றிய விளக்கங்களையும், மெய்யான இந்துமதத்தின் விளக்கங்களையும் இதுவரை 472 வெளியீடுகளாக வெளியிட்டு வந்துள்ளார்கள். பதினெண்சித்தர் மடாதிபதியும் தாம் உருவாக்கியுள்ள இந்து மறுமலர்ச்சி இயக்கம், அருட்பணி விரிவாக்கத் திட்டம், தமிழின மொழி மத விடுதலை இயக்கம், ... முதலிய நாற்பத்தெட்டு வகையான நிறுவன நிர்வாகங்கள் மூலம் தமிழகமெங்கும் அடிக்கடி சுற்றுப்பயணங்கள் செய்து நிகழ்த்தக் கூடிய அருளுரைகளில் இத்தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றிய செய்திகளை நிறைய வெளியிட்டுள்ளார்.

2. இப்பதினெண்சித்தர் மடத்தின் மூலம் உருவாகியுள்ள ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் நாடெங்கும் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி எனும் ஐந்தினையும் நிகழ்த்தி, அருட்கோட்டங்களை அமைத்து மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கி வருகிறார்கள். இதனால், இந்துமதத்தின் உயிரோட்டமான பதினெண்சித்தர்களின் மந்திரத்தின் மூலம் நோயாளிகளையும், பேயாளிகளையும், மற்ற பாதிப்புள்ளவர்களையும் நலப்படுத்தி வருகிறார்கள்.

3. ***'தஞ்சைக் கோயிலில் ஒரு தவறு'*** என்ற தலைப்பு நமது மத உணர்வை, மதம் சார்ந்த அறிவியல் கலைகளை நேரடியாகப் பாதிப்பதாக இருக்கிறது. இது போன்ற தலைப்புக்குப் பதில் வேறு தலைப்பு கொடுத்து இருக்கலாம். நடந்தது நடந்து விட்டது. எல்லாம் இறைவன் செயல்.

4. சிவன் கோயிலில் வைக்கப்படும் நந்தி; சிவன் கோயில் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான் அக்கோயிலின் அமைப்பு, கருவறை மூலவரின் அருள் நிலை, அது ஆயிரத்தெட்டு வகைகளில் எந்த வகையைச் சார்ந்தது என்பனவற்றைக் கணித்து அதற்கேற்ப நந்தியின் சிலையைச் செதுக்க ஆரம்பிப்பார்கள். அதாவது, ஆயிரத்தெட்டு சிவாலயங்களுக்கு ஏற்ப நந்திகள் வேறுபடும். இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடங்களுக்கு ஏற்ப சிங்க வாகனமும், புலி வாகனமும் வேறுபடும்.

(i) நந்திகளில் வாய் மூடிய நிலை, நாக்கை சிறிது சிறிதாக நீட்டுகின்ற நிலை, ஒரு பல் முதல் பன்னிரண்டு பல் வரை வெளியே தெரிகின்ற நிலை என்று பல்வேறு வகையான நிலைகள் உண்டு. அவற்றின் ஒரு நிலைதான் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள நந்திக்கு பன்னிரண்டு பற்கள் இருப்பது.
(ii) தஞ்சைப் பெரிய கோயில் பற்றி நிறைய வெளியீடுகள் வெளியிடப்பட்டும், தஞ்சைப் பெரிய கோயில் கருவறை முன்மண்டபத்தின் வெளிப்புறத்தில் இரு பக்கமாக மொத்தம் ஒன்பது மனிதர்கள் சிலை வைக்கப்பட்டிருப்பதின் விளக்கம்.
(iii) தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தில் உள்ள பல்வேறு இனத்தவர்கள் உருவங்கள் பற்றிய விளக்கம்.
(iv) தஞ்சைப் பெருவுடையாருக்கு இடப் பக்கமாக ஒரே நேர்க்கோட்டில் தேவி பெரிய நாயகியின் கருவறையை அமைக்காதது பற்றிய விளக்கம்.
(v) தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தின் அடிப்பகுதிக்கும், ஞானுச்சாரியார் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் நிலவறைக்கும் இடையில் தரைமட்டத்திற்கு தண்ணீர் ஊறி நிற்கக் கூடிய ‘பால் ஊற்று’, ‘அருட் கேணி’, ‘ஞானக் கிணறு’ என்று குறிக்கப்படும் வற்ருத நீரூற்று உள்ள கிணறு ஒன்று தோண்டப்பட்டுள்ளதின் விளக்கம்.

(vi) பெருவுடையார் கருவறையின் இடப்பக்கத்தில் முருகப் பெருமான் கருவறையும், பின்பக்கத்தில் வலப்பக்கத்தில் பிள்ளையாரின் கருவறையும், வலப்பக்கத்தின் முன்னால் தேவி வராகி அம்மன் கருவறையும், ஆஞ்சநேயர் கருவறையும், பெருவுடையார் கோவிலைச் சுற்றியுள்ள மண்டபங்களில் இலிங்கங்கள், சத்தி இலிங்கங்கள், சிவ இலிங்கங்கள் வேறுபாடு காண முடியாது இருப்பது பற்றிய விளக்கங்கள் விரிவாகத் தங்களுடைய குமுதம் ஏட்டில் எழுதுவதற்கு அழைப்பு விடுத்தால் எழுதலாம்.

(vii) தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறைக் கோபுரம் 42 மாதங்களுக்கு மேலாக மொட்டைக் கோபுரமாகவே இருந்தது. அதன்பிறகுதான் இராசராச சோழனால் கோபுரத்தின் உச்சிக்கு எடுத்துச் செல்ல முடியாத கல்லை, தனி ஒரு மனிதராக ஞானச்சாரியார் கொண்டு சென்று கோபுரத்தை மூடினார். அப்படிக் கோபுரம் மொட்டைக் கோபுரமாக 42 மாதங்கள் இருந்ததாலும், இராசராச சோழன் கோபுரத்தின் உச்சியிலிருந்து தன்னைப் பலியிட்டுக் கொண்டதாலும், விளைந்த சாபத்தால் நாட்டை ஆளுகின்றவர்கள் ஞானச்சாரியாரின் பாரம்பரியத்தாரின் துணையின்றி இக்கோயிலுக்குள் நுழைந்தால் பேராபத்துக்குள்ளாவார்கள் என்ற விதி ஏற்பட்டது. இதன்படிதான் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும், தமிழக முதலமைச்சர் M.G. இராமச்சந்திரன் அவர்களும் பதினெண்சித்தர் மடத்தின் எச்சரிக்கையை மீறிச் சென்று மிகப்பெரிய பாதிப்புக்களை அடைந்தார்கள். இவர்களைப் போலவே சில மத்திய அமைச்சர்களும், மாநில அமைச்சர்களும் பாதிப்பு அடைந்துள்ளார்கள். அதாவது நாட்டை ஆளுகின்ற அமைச்சரோ, அரசனோ இக்கோயிலுக்குள் நுழைவதென்றால் ஞானச்சாரியாரின் பாரம்பரியத்தாரின் துணை இன்றியமையாதது ஆகும். ஆனால், பொதுமக்களுக்கு இந்த விதி கிடையாது. எனவே, யாராவது தஞ்சைப் பெரிய கோயிலினால் விளையும் ஆபத்துக்கள் என்று

தலைப்பிட்டுச் செய்தி ஏதும் தங்களது வார ஏட்டிற்கு வந்தால் அவசரப்பட்டு வெளியிட்டு விட வேண்டாம். பதினெண்சித்தர் மடத்திற்கு தெரிவியுங்கள்.

---

குறிப்பு:-

இந்த நெடிய விளக்கத்தில் இருந்து தாங்கள் தங்களுக்குத் தேவையான கருத்தினை வெளியிடலாம் என தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை செங்குன்றம், காரனோடைக் கிராமத்தில் G.N.T. நெடுஞ்சாலையில் பதினெண்சித்தர் மடத்தின் கருகுலம் இருக்கின்றது. அங்கு ஞாயிற்றுக்கிழமைகளில் வாராவாரம் மக்களுக்கு அருட்பணியாற்றப்படுகின்றது என்ற செய்தியும் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது இதன்மூலம். தேவையானல் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்: 654447.

எங்களுடைய வெளியீடுகளில் அறிக்கை, அறிவிக்கைகளில் சில இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. அனைத்து வெளியீடுகளும் தேவையென்றால் அனுப்பி வைக்கப்படும்.

---

**பதினெண்சித்தர் மடம்,**

**4 - 2 - 90.**

அச்சிட்டவர்: அறிவாநந்தர், குடந்தை, போன் 22707.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: அச்சிட்ட இருபக்க தாளின் ஒளி நகல். இந்த நகல் மதுரை சித்தரடியான் திரு மோகன் அவர்களின் கோப்புக்களில் இருந்து பெறப்பட்டது.//**

ஓம்

தலைமைப்பீடம்,
28-8-1990.

# மந்திரித்தல்

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் அண்டபேரண்ட அருட்பேரரசராகி அரியாசனத்தில் அமர்ந்து இன்றைக்கு அருளாட்சி அமைக்கும் பொறுப்பினைத் தாமே ஏற்றுக் கொண்டு தமது பேரனும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியும் ஆகிய குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களைத் தாங்கள் அருளாணைகளை வெளிப்படுத்தும் குருவாணை ஓலைநாயகமாக நியமித்து இருக்கிறீர்கள். இந்த குருவாணை ஓலைநாயகத்தை குருவாகக் கொண்டு செயல்படுகின்றோம் நாங்கள். எனவே, என்னை (*பெயர்* .... .... .... *அருட்பட்டங்கள்* ... ... ... ) முழுக்க அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபடுவதற்குரிய எல்லாவகையான தகுதிகளையும் பெறுமாறு அருள்புரியுங்கள். எனக்கோ, என் குடும்பத்திற்கோ, என்னைச் சார்ந்தவர்களுக்கோ, நமது இயக்கத்தவர்களுக்கோ எந்த சத்தியாலும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்திடுங்கள்.

அருளுலகத்தில் பதினெட்டுப் படைவீடுகள் அமைத்து இம் மண்ணுலகக் காப்பாளராக விளங்கும் தேவகுமாரனும், அருட்படைத் தலைவனும், தேவசேனாதிபதியுமான முருகப் பெருமான் வள்ளி தெய்வானை எனும் தேவியர்கள் இருவரோடு போர்க்கோலம் பூண்டு மயில் மீதமர்ந்து அருட்போரை நிகழ்த்த ஒப்புக் கொண்டிருப்பதால் அருட்படையில் பங்கு பெற்றுள்ள எங்களையெல்லாம் காத்தருளுமாறு தாங்கள்தான் ஆவன செய்தருள வேண்டும்.

தஞ்சைத் தாத்தாவாகிய தாங்கள்; நாங்கள் அருளை அனுபவப் பொருளாக வழங்கும் ஆற்றலை உங்களின் மூலமும், உங்களின் பேரனாகிய எங்களது குருதேவரின் மூலமும் பெற்றே செயல்படுகிறோம் என்பதால்; எங்களுக்கு போர்க்கால போர்க்கோல வீரமாகாளிகள், கொற்றவைகள், ஏவல் போர்க் கொற்றவைகள், இராகுகாலக் கொற்றவைகள் ... முதலிய அனைவருமே எல்லாவகையான பாதுகாப்புக்களையும் வழங்குமாறு ஆவன செய்தருளுங்கள்.

தத்துவ நாயகமாகவும், அருளாட்சி நாயகமாகவும், குவலய குருபீடமாகவும், இந்து மதத் தந்தையாகவும் விளங்குகின்ற ஞானச்சாரியாரான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியான குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறாராகிய தாங்கள் நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும், நாள் கோள் மீன் பாதிப்பாளர்களுக்கும், அருவ உருவ அருவுருவ உருவருவங்களின் தாக்குதல்களுக்கும் உள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நலமளிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் எங்களுக்கும் எனக்கும் (*பெயர்.... ....* ); தாத்தாக்களும் ஆத்தாக்களும் ஆகிய அனைத்து வகையான முனீசுவரர்களும், முனீசுவரிகளும், முனியப்பன்களும், முனியம்மாக்களும், கருப்புக்களும் பாதுகாப்புக்களை தர வேண்டும். அதற்குரியன அருளுங்கள்.

ஓம் இன்றைய அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் திருப்பெயரால் தாத்தா பாண்டி முனீசுவரர் அவர்களே! தங்களையும் தங்களுடைய அன்புக்கும், ஆதரவுக்கும், நட்புக்கும் உரியவர்களையும் தங்களுடைய அருளாணைகளை ஏற்றுச் செயல்படுபவர்களையும் எங்களைப் பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். நாங்கள் அருளாட்சிக்காக அமைந்துள்ள பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம் வழங்கும் அனைத்து அருளாணைகளையும் முழுமையாகச் செயலாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். எங்கள் முன்னிலையிலுள்ள

பாதிப்பாளர்களுக்கு என்னென்ன பாதிப்புக்கள் என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து ஆவன செய்திட அருள்புரியுங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

சத்தி, சித்தி காயந்திரிகள், அருட்சினை வாசகம், தாத்தா அருட்பட்டங்கள், குருதேவர் அருட்பட்டங்கள் கூறப்பட வேண்டும்.

இதைத் தினமும் பகல் 11 - 1½யிலும், இரவு 11 - 1½யிலும் கூறி வந்தால் அருளுலக அநுபவங்களும், பாதுகாப்புக்களும், சித்திகளும் கிடைக்கும்.

குறிப்பு:- அ.வி.தி. செயல்வீரர்களுக்குப் பயிற்சி என்ற குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

## ஈசுவரன்

ஈ = இரக்கம், கொடை

ஈசுவரன் => இரக்கத்தால் கொடுக்கின்றவன்.

விளக்கம்:

யார் என்ன வரம் கேட்டாலும் யோசிக்காமல் கொடுக்கக் கூடிய ஒரே கடவுள் சிவனான ஈசுவரன்.

ஈசன் => ஈகையில் சிறந்தவன்.

=> ஈகையில் மிக்கோன்.

**//தலைமைப்பீடக் குறிப்பேடுகளில் குருதேவர் கூறி எழுதப்பட்டு உள்ள கருத்து.//**





மெய்ஞ்ஞானக் கொடி



தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

காரணோடைக் கருகுலத்தைக் கட்டிய 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

# திருமண வாழ்த்துப் பரணி

**மணமகன்:** திருநிறைச்செல்வன் M. நாகேசுவரன்.
**மணமகள்:** திருநிறைச்செல்வி K.J. நிர்மலா.

**மணநாள்:** 43,73,091 ஆனி 21 (5 - 7 - 1990) வியாழக்கிழமை.
**இடம்:** சக்கரபாணி நாயுடு கல்யாண மண்டபம், செங்குன்றம்.

அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் இப்புவிப் பரப்பின் அருளுலகின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும், தத்துவ வித்துக்களாகவும், சித்தாந்த நாற்றுக்களாகவும் உருவாக்கிய தமிழினத்தின் வளவளர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும் பாடுபடும் விடுதலை இயக்கமான இ.ம.இ.யின் வடக்கு மண்டல இணைச் செயலாளரே! அருள்மிகு பெரியபாளையம் பவானி அம்மன் சன்னிதானமே! திருநிறைச் செல்வ! சித்தர்நெறிச் செயல்வீர! நாகேசுவரா! நீவிர் சித்தர் நெறிப்படி புனித இல்லறமேற்கும் இத்திருநாளில் நாங்களனைவரும் உங்களை வாழ்த்துகிறோம். எங்களோடு சேர்ந்து அனைத்து வகையான தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும், மற்றுமுள்ள அருளுலகத்தவர்களும், பொருளுலகத்தவர்களும் தங்களை வாழ்த்துகிறார்கள். இது முதல்

தங்களுக்கு சித்தர் நெறிப்படி இனிமை நிறை இல்லறம் சித்திக்கட்டும்! தித்திக்கட்டும்!

தாங்களும் தங்களுடைய துணைவியார் நிர்மலாவும் அருளுறு பொருள்நிறை வாழ்வு வாழ்ந்திடுமாறு இன்றைய அருளாட்சி நாயகம், ஞானுச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களும்; அவர்களின் குருவாணை ஓலைநாயகமான குருதேவர் ஞானுச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களும் உங்களுடைய இல்லற வாழ்வின் இரு கண்களாகத் திகழ்ந்திடுவார்கள். இதனை எண்ணி தாங்கள் எப்போதும் அறிவு விழித்த நிலையில் தமிழின, மொழி, மத விடுதலை இயக்கத்திலும், அருளை அநுபவப் பூர்வமான மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்திலும் முன்னணிச் செயல்வீரராகத் திகழ்ந்திட வேண்டும்.

பதினெண்சித்தர்களுடைய மெய்யான இந்துமதப்படி தங்களுடைய இல்லற வாழ்விலும், தங்களின் மூலம் மற்றவர்களுடைய இல்லற வாழ்விலும் அன்பூறு நட்பும், தோழமையும் இனிதே விளையட்டும். உங்களின் மூலம் உலகம் தழுவிய நல்லுறவு, பொதுவுடமை, சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், நிறைவு, நிம்மதி, மகிழ்ச்சி, அமைதி, இன விடுதலை, மொழி விடுதலை, மத விடுதலை, தனி மனித உரிமை வாழ்வு, குடும்ப வாழ்வின் பற்றுப் பாசக் கட்டுக்கோப்புகள் ..... முதலிய அனைத்தும் எழிச்சி பெறட்டும்! செழிச்சி பெறட்டும்!

தங்களுடைய இல்லற வாழ்வில் பதினெண்சித்தர்கள் குறிப்பிடும் பதினாறு வகைச் செல்வங்களும், கொழுமை நிறைச் செழுமை பெறட்டும். தாங்கள் நன்மக்களைப் பெற்று, மூத்தோர்களை மதித்து, முன்னோர்களை வழிபட்டு, நம்நாட்டுப் பண்பாட்டு பாரம்பரியக் கூறுபாடுகளையும், மரபு வழி நெறிமுறைகளையும் போற்றிப் பேணிப் பாதுகாப்பீர்களாகுக. நுமது இல்லறம் வளவளர்ச்சி பெறட்டும்! நீவிர் தங்களது

குடும்பத்தார்களுடனும், சுற்றத்தார்களுடனும் இனிதே வாழ்ந்திட அனைவரும் வாழ்த்துகிறோம்.

**இந்து மறுமலர்ச்சி இயக்கமும், இதன் கீழ் உள்ள 48 வகையான நிறுவன நிருவாகங்களும் சேர்ந்து இவ்வாழ்த்து மடலை வாசித்தளிக்கின்றன.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**இவண்**

**அன்பு**

**குருமகாசன்னிதானம்**

**//உண்மை நகல்//**

**//மூலம்: அச்சிட்ட அறிவிக்கை.//**

## கேழ்வரகு

கேழ்வரம் = கேள்வரம் என்று அழைக்கப்படுவதே கேழ்வரகு. இதைச் சாப்பிட்டுப் பூசை செய்தால் சிறப்பாக இருக்கும்.

கேழ்வரகு மிகத் தூய்மையான விதத்தில் அல்லி மலரினுள் இருக்கும். அல்லி மலரை உடைத்தால் உள்ளே கேழ்வரகு, கோதுமை, நெல், கம்பு ... முதலிய தானியங்களும் கிடைக்கும். அல்லி இந்தத் தானியங்களுக்குப் பிறப்பிடம். அல்லியில் கிடைக்கும் கேழ்வரகை அப்படியே கஞ்சி செய்தால் மிக அருமையாக இருக்கும். சவ்வரிசி போல் நன்கு வெந்து கஞ்சியாகிடும்.

**//தலைமைப்பீடக் குறிப்பேடுகளில் குருதேவர் கூறி எழுதப்பட்டு உள்ள கருத்து.//**

**<u>இருக்குவேதம் 9999 காண்டம்: 5, மண்டலம்: 17, நாள் வாசகம்: 15</u>**

1. ஓர் இனத்துக்குரிய கடவுள்கள், அந்த இனத்தவர்களே மட்டுமே பாதுகாத்திடுவார்கள்
2. ஒரு மொழிக்குரிய கடவுள்கள், அந்த மொழிக்குரியவர்களே மட்டுமே பாதுகாத்திடுவார்கள்.
3. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள், அந்த நாட்டவர்களே மட்டுமே பாதுகாத்திடுவார்கள்.

**<u>அசுர வேதம் 9999 காண்டம்: 5, மண்டலம்: 17, நாள் வாக்கு: 15</u>**

1. ஒரு குடும்பத்துக்குரிய ஆண்டவர்கள், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே மட்டுமே பாதுகாப்பார்கள்.
2. ஒரு குலத்துக்குரிய தெய்வங்கள், அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களே மட்டுமே பாதுகாப்பார்கள்
3. ஒரு கிராமத்துக்குரிய தேவர் தேவதைகள், அந்தக் கிராமத்துக்குரியவர்களே மட்டுமே பாதுகாப்பார்கள்.
4. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள், அந்த நாட்டுக்குரியவர்களே மட்டுமே பாதுகாப்பார்கள்.

**// இந்து வேதம் //**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040)...




...பாரம்பரியத்தில்
12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."
- குருபாரம்பரிய வாசகம்


Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.



https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com


காணிக்கை : ரூ10/-